**சிறப்பு நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்**
**முன்னிலை: திருமதி. Dr.R.லதா, M.A., M.L., Ph.D.,**

**சார்பு நீதிபதி, ஜெயங்கொண்டம்**
**சிறப்பு நீதிபதி எண்.1(FAC), ஜெயங்கொண்டம்.**

2024 ஆம் வருடம் பிப்ரவரி திங்கள் 12–ம் நாள் திங்கள் கிழமை

I.A. 04 of 2023
in
O.S. 03 of 2020

கோவிந்தசாமி, வயது 51,
த/பெ.இராஜமாணிக்கம்(லேட்),
மோந்திரையன் கொட்டாய்,
வெண்மான்கொண்டான் கிராமம் & அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம். ... மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி

...எதிர்...

1) இராஜமாணிக்கம்(இறந்தார்),
த/பெ.கோவிந்தபடையாட்சி,
வெண்மான்கொண்டான் கிராமம் & அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.

2) ராஜீவ்காந்தி, வயது 33,
த/பெ.இராஜமாணிக்கம்(லேட்),
காளியம்மன் கோவில் தெரு,
வெண்மான்கொண்டான் கிராமம் & அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.

3) பழனிமுருகன், வயது 28,
த/பெ.இராஜமாணிக்கம்(லேட்),
காளியம்மன் கோவில் தெரு,
வெண்மான்கொண்டான் கிராமம் & அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.

4) சங்கீதா, வயது 35,
க/பெ.கார்த்தி,
ரைஸ் மில் அருகில்,

நாச்சியார்பேட்டை கிராமம்,
மணகெதி அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.

5) ரஞ்சிதா, வயது 32,
மணிகண்டன்,
பிள்ளையார் கோவில் தெரு,
வெண்மான் கொண்டான் கிராமம் & அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.

6) ராஜராஜன், வயது 61,
த/பெ.இராஜமாணிக்கம்,
முருகன்கோவில் தெரு,
வெண்மான்கொண்டான் கிராமம் & அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 வாதிகள்

7) அலமேலு, வயது 79,
க/பெ.சந்திரகாசன்,
வெண்மான் கொண்டான் கிராமம் & அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.

8) சரஸ்வதி, வயது 67,
க/பெ.நாராயணசாமி,
கொட்டாய்காடு,
வெண்மான் கொண்டான் கிராமம் & அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 08.02.2024–ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.திருமாவளவன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் இன்று கீழக்கண்டவாறு வழங்கும்...

**ஆணையுரை**

இம்மனுவானது உ.வி.மு.ச பிரிவு 151–ன் கீழ் இம்மனுவுடன் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை வழக்குரை சொத்து விவரத்தில் 54 முதல் 102 சொத்தாக சேர்த்து தொடர்ந்து வழக்கினை மேல் நடத்த உத்தரவு கோரி 1 ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவுரை சுருக்கம்:–</u>

மனுதாரர் அசல் வழக்கில் 1ஆம் பிரதிவாதி ஆவார். இராஜமாணிக்கத்தின் சட்டப்படியான மனைவி பார்வதி ஆவார். 1ஆம் பிரதிவாதியும் சரஸ்வதியும் அவரது வாரிசுகள். தாயார் உயிருடன் இருக்கும் காலத்திலேயே தந்தையான இராஜமாணிக்கம் சிவமாலை என்பவரை சேரத்துக்கொண்ட வகையில் இவர்களுக்கு இராஜராஜன் என்ற மகன் மட்டும் வாரிசு ஆவார். தந்தை இராஜமாணிக்கம் காந்தி என்பவருடன் திருமணம் செய்யாமல் குடும்பம் நடத்தி அவருக்கு ராஜீவ்காந்தி, பழனிமுருகன் என்ற 2 ஆண் குழந்தைகளும், இரஞ்சிதா, சங்கீதா என்ற 2 பெண் குழந்தைகளும் வாரிசுகள் ஆவார்கள். இராஜமாணிக்கம் பாகம் கோரி அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 5/2005 தாக்கல் செய்தார். அது 2017 இல் ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் ஆகி அசல் வழக்கு எண். 9/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த வகையில் இந்நீதிமன்றத்திற்கு மீண்டும் மாறுதல் ஆகி 3/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் இராஜமாணிக்கம் இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் குடும்ப சொத்துக்களைப் பொறுத்து வில்லங்கம் பார்த்தபோது பூர்வீக சொத்தை இறந்த இராஜமாணிக்கம் அவரது சட்ட முரணான மனைவிகளுக்கும் பிறந்த குழந்தைகளுக்கும் மனுதாரர் கோரிய சொத்துக்களையும் சேர்த்து தானமாகவும், கிரயமாகவும் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். இந்த விவரம் எதிர் வழக்குரையில் 2005 ஆம் ஆண்டிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. நாளது வரை அதனை சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில், 1991 ஆம் ஆண்டு இறந்த இராஜமாணிக்கம் அவருடைய மற்ற வாரிசுகளின் பெயரிலும் மனுதாரரால் அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் பூர்விக சொத்துக்களில் பாகம் கோரி 117/1991 தாக்கல் செய்து நிலுவையில் இருந்தபோது இராஜமாணிக்கம் தாயாரின்

அனைத்து நகைகளையும் சொத்துக்களின் பாதி பாகங்களையும் தருவதாக சொன்னதால் அதனை மேல் நடத்தவில்லை என்றும், "B" அட்டவணை சொத்தில் கண்டுள்ள நகைகளை சேர்க்க வேண்டியது அவசியம் என்றும் மனுதாரரின் சகோதரி சரஸ்வதி தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 52/1987 தாக்கல் செய்து விசாரணைக்கு பிறகு தீர்ப்பாகி உள்ளது. அதில், இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு "B" அட்டவணை சொத்து இறந்த இராஜமாணிக்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 09.12.2020 தேதியில் இராஜமாணிக்கம் இறந்து விட்டதால் அதில் மனுதாரருக்கு உரிய பாகம் உள்ளதாலும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள "B" அட்டவணை சொத்து இவ்வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியம் என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து சொத்துக்களிலும் மனுதாரருக்கு பாக உரிமை உள்ளதாலும் விடுபட்ட அனைத்து சொத்துக்களையும் சேர்க்க வேண்டியது அவசியம் என மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) <u>2 ஆம் எதிர்மனுதாரரான 2 ஆம் வாதியால் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை 1, 3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டதன் சுருக்கம்:–</u>

மனுதாரின் மனு சங்கதிகள் உண்மையல்ல. சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவை மறுக்கப்படுகிறது. அசல் வழக்கு அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் இருந்தே விசாரணை தொடங்கப்பட்டு வா.சா.1 ஆக 1 ஆம் எதிர்மனுதாரர் விசாரிக்கப்பட்டு வாதி தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. இம்மனுதாரரால் தாக்கல் செய்த எதிர் வழக்குரைக்கேற்ப 13.03.2014 இல் வாதியை குறுக்கு விசாரணையும் செய்துள்ளார். 49 இனச் சொத்துக்களை தாக்கல் செய்யக் கோருவது அவரது முன் எதிர் வழக்குரையின் சங்கதிகளுக்கு முன்னுக்குபின் முரணாக உள்ளதால் இம்மனு அனுமதிக்க உதந்ததல்ல. இம்மனு அனுமதிக்கப்பட்டால் வழக்கின் தன்மை மாறிவிடும். குறிப்பாக 39 முதல் 49 இன சொத்துக்கள் அனைத்தும் ஜங்கம சொத்துக்கள் என்பதால் அவை பொது குடும்பச் சொத்துக்கள் இல்லை. இவ்விவரத்தை வாதி தனது குறுக்கு விசாரணையில் சாட்சியமாக அளித்துள்ளார். மனுதாரரின் தாயின் நகைகள் எதுவும் இந்த எதிர்மனுதாரர் வசம் இல்லை. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 1

முதல் 49 இனச் சொத்துக்கள் பொதுக்குடும்ப சொத்துக்கள் என காட்ட மனுதாரரால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் மேற்படி சொத்துக்களை சேர்க்க வாதியை நிர்பந்தப்படுத்த முடியாது. மேலும், 1 முதல் 49 சொத்துக்களில் மதிப்பு விவரமும் கொடுக்காமல் வழக்கை முடியாவண்ணம் பல வருடங்கள் காலம் கடத்தும் நோக்கிலேயே இம்மனு தாக்கல செய்யப்பட்டுள்ளது. மனுவுரையில் 4 ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ளவை உண்மையல்ல. அசல் வழக்கு எண் 52/1987 தீர்ப்பு சம்மந்தப்பட்ட ஆதரவுகள் எதுவும் தாக்கல் செய்யவும் இல்லை. அதன் அடிப்படையில் 54 முதல் 102 சொத்துக்களை இம்மனுவில் சேர்க்க கோருவது நீதியின் நலனுக்கும் சட்டப்படிக்கும் நியாயம் இல்லை. 1 ஆம் எதிர்மனுதாரரான வாதி ஏற்படுத்தியதாக கூறும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் இவ்வழக்கில் வாதி தரப்பு விசாரணை முடிவுற்ற பின் சேர்க்க கோருவது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பது தான்.

6) <u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>

இம்மனுவில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை வழக்குரை சொத்து விவரத்தில் 54 முதல் 102 சொத்தாக சேர்த்து தொடர்ந்து வழக்கினை மேல் நடத்த உத்தரவு கோரி 1 ஆம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் அசல் வழக்கில் 1 ஆம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது 2005 இல் வழக்குச் சொத்துக்களான 1 முதல் 43 இனச் சொத்துக்களில் 3/4 பாகம் முதல் நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்மனுதாரர் குறிப்பிடுவதுபோல் இறந்துவிட்ட வாதி 18.06.2007 அன்று விசாரிக்கப்பட்டு அவர் தரப்பில் 1 முதல் 4 ஆவணங்கள் குறியீடு செய்து இந்த மனுதாரரால் 13.03.2014 இல் வா.சா.1 ஐ பகுதியாக குறுக்கு விசாரணை செய்துள்ளார். அதன்பிறகு ஒன்றன்பின் பல்வேறு காரணங்களால் இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குச்சொத்துக்கள் பொது குடும்பச் சொத்துக்கள் என்பதை நிரூபிக்கும்பொருட்டு மனுதாரர் தரப்பில் இராஜமாணிக்கம் பெயரில் உள்ள கணினி பட்டா ம.சா.ஆ.1, 7, 8, 9, 10, 12, 13, 14, 15, 16, 17 ஆகவும், அவரது 3 வது மனைவி காந்தி பெயரில் உள்ள கணினி பட்டா ம.சா.ஆ.2, 6 ஆகவும், வாதிகள் பெயரில் உள்ள கணினி பட்டா ம.சா.ஆ.3, 5 ஆகவும், கொளஞ்சிநாதன் பெயரில் உள்ள கணினி பட்டா ம.சா.ஆ.4 ஆகவும், 2 வது மனைவி சிவமாலை பெயரில் உள்ள கணினி பட்டா ம.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கு 117/1991 இன் வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை மா.சா.ஆ.18, 19, 20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், வழக்குச் சொத்துக்கள் கூட்டுக்குடும்ப பொது சொத்துக்கள் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலும் வழக்கை தாக்கல் செய்த வாதி மேற்படி சொத்துக்களை சேர்க்க தயாராக இல்லாதபோது அவரை பிரதிவாதி குறிப்பிடுவதுபோது வழக்குரையில் அச்சொத்துக்களை சேர்க்க கட்டயாப்படுத்த முடியாது. மேலும், அசல் வழக்கானது மனுதாரரின் தகப்பனார் இராஜமாணிக்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பதாலும் பொதுக்குடும்பச் சொத்துக்களிலிருந்து அவருக்கு கிடைக்கக்கூடிய பாக வீதத்திற்கு தாக்கல் செய்திருப்பதாலும் அவர் இறந்த பிறகும் அதனைப் பொறுத்துதான் அசல் வழக்கில் தீர்வு காண முடியும். அதேசமயம் மனுதாரர் குறிப்பிடுவதுபோல் மேற்படி சொத்துக்கள் இராஜமாணிக்கத்திற்கும் பொதுக்குடும்பச் சொத்துக்களா என்பது குறித்தும் அவைகளை சேர்க்காததால் வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கதா என்பது குறித்து அசல் வழக்கில்தான் தீர்வு காண முடியும். அசல் வழக்கு 2005 இல் தாக்கல் செய்யப்பட்டு 19 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வரும் காரணத்தை கருத்தில்கொண்டும் வாதி தரப்பில் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை சேர்த்து மறுக்கும் நிலையில் வாதியை கட்டாயப்படுத்த முடியாது என்பதாலும் அதன் சட்ட செல்லுத்தன்மையை சாட்சிய சான்றாவணங்களின் விசாரணையின் அடிப்படையில் முடிவு செய்வதே சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**இறுதியில்,**

**இம்மனுவானது செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று (12.02.2024) அவையறிய பகரப்படுகிறது.

R LATHA Digitally signed by R LATHA Date: 2024.02.12 18:43:09 +0530

சிறப்பு நீதிபதி எண்.1(FAC),
ஜெயங்கொண்டம்.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சி:-இல்லை**</u>

<u>**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | - | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 1, 14, 15, 20-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.2 | - | இராஜமாணிக்கம் 3 வது மனைவி காந்தி பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 2, 3-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.3 | - | வாதிகள் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 4, 5, 10, 11-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.4 | - | மனுவில் கண்ட இனம் 6, 7, 8, 9-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.5 | - | வாதிகள் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 12, 13-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.6 | - | இராஜமாணிக்கம் 3 வது மனைவி காந்தி பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 16, 17, 18, 19-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.7 | - | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 21-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.8 | - | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 22-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.9 | - | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 23-க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.10 | - | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் |

| | | |
|---|---|---|
| | | உள்ள மனுவில் கண்ட இனம் 24–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.11 | – | இராஜமாணிக்கம் 2 வது மனைவி சிவமாலை பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 25, 26–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.12 | – | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 27, 28, 29, 30, 31–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.13 | – | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 32–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.14 | – | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 33–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.15 | – | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 34–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.16 | – | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 35–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.17 | – | மனுதாரரின் தந்தை இராஜமாணிக்கம் பெயரில் உள்ள மனுவில் கண்ட இனம் 36, 37, 38–க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.18 | – | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் 117/1991 இல் நடைபெற்ற வழக்கின் பிராது நகல். |
| ம.சா.ஆ.19 | – | அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் 117/1991 இல் நடைபெற்ற வழக்கின் எதிர் வழக்குரை நகல். |
| ம.சா.ஆ.20 | – | அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் 117/1991 இல் நடைபெற்ற வழக்கில் இராஜமாணிக்கத்தின் 3 வது மனைவி காந்தி தாக்கல் செய்த எதிர்வழக்குரை நகல். |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:– .. இல்லை ..

R LATHA Digitally signed by R LATHA
Date: 2024.02.12 18:43:24 +0530

சிறப்பு நீதிபதி எண்.1(FAC),
ஜெயங்கொண்டம்.